இந்து சமய அறநிலையத்துறை

**அனுப்புநர்**
க.வீ.முரளீதரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை–34.

**பெறுநர்**
அனைத்து மண்டல இணை ஆணையர்கள்
அனைத்து இணை / துணை / உதவி ஆணையர் / செயல் அலுவலர்கள்
அனைத்து சரக உதவி ஆணையர்கள்

<u>சுற்றறிக்கை ந.க.எண். 77624 / 2023–1 /இசட் 1/ நாள். 16.03.2024</u>

ஐயா/அம்மையீர்,

பொருள் : இந்து சமய அறநிலையத்துறை – திருக்கோயில் நிர்வாகம் – திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருமண மண்டபங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் வாகன நிறுத்துமிடம், மின்தூக்கி, சாய்வுதளங்கள், கழிப்பிட வசதிகளை ஏற்படுத்துதல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக

பார்வை :
1. பொது செயலாளர், தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பு கடித நாள்: 26.08.2023
2. அரசு கடித எண்.5551872/அநி1–1/2023–1 நாள் 07.09.2023
3. இவ்வலுவலக அ.சா.கு.எண். /2023/பி3/ நாள் 20.11.2023 (உறுப்பினர் / செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம், கடித ந.க.எண்.4289/ த.நா.மா.தி.ந.வா/ 2022 நாள் 29.09.2023 உடன் இணைத்து வரப்பெற்றது)
4. அரசு செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, நேர்முக கடித எண். 005/ செயலாளர் (மா.தி.ந.து) / 2023, நாள்: 10.11.2023. (பொது செயலாளர், தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பு கடித நாள்: 03.11.2023 உடன் இணைத்து வரப்பெற்றது)
5. அரசு மின்னணு கடித எண்.1571/மா.தி.ந.–301/2023–1/நாள் 12.12.2023 (பொது செயலாளர், தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பு கடித நாள்: 03.11.2023 உடன் இணைத்து வரப்பெற்றது)

------

பார்வை (2), (4) மற்றும் (5)–இல் காணும் அரசு கடிதங்களில் தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ள

கோரிக்கையின் மீது விதிகளின்படி நடவடிக்கை எடுத்திட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பின் பொது செயலாளரால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான அனைத்து திருமண மண்டபங்களிலும் மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயன்படுத்தும் வகையில், வாகன நிறுத்துமிடம், மின்தூக்கி, சாய்வுதளங்கள், கழிப்பிட வசதிகளை ஏற்படுத்தி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பார்வை (3)–இல் காணும் கடிதத்தில் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து திருமண மண்டபங்களிலும், மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகும் முறையில் தேவையான வசதிகளை ஏற்படுத்திட அனைத்து சார்நிலை அலுவலர்கள் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திருக்கோயில்களுக்கு வருகைத்தரும் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் தொடர்பாக நிலையான வழிகாட்டி நெறிமுறைகள் ஆணையர் ந.க.எண்.18005/2020/Z3 நாள்: 01.06.2020–இன்படி ஏற்படுத்தப்பட்டு திருக்கோயில்களில் பின்பற்றப்பட்டு வருகிறது. மேலும் சட்டமன்ற அறிவிப்பின்படி மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலி வசதிகள், சாய்வு தள வசதிகள் ஏற்படுத்திட ஆணையர் ந.க.எண்.27080/2022/Z1 நாள்:30.05.2022–இன்படி அறிவுரைகள் வழங்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

எனவே தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பின் கோரிக்கையினை ஏற்றும், அரசு கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளதன் அடிப்படையிலும், இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களுக்குச் சொந்தமான அனைத்து திருமண மண்டபங்களிலும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் வாகன நிறுத்துமிடம், மின்தூக்கி, சாய்வுதளங்கள், கழிப்பிட வசதிகளை ஏற்படுத்திட நடவடிக்கை எடுத்திட அனைத்து சார்நிலை அலுவலர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இச்சுற்றறிக்கையினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் / அறங்காவலர்கள் / நிர்வாகிகள் ஆகியோருக்கு சார்வு செய்து உரிய அறிவுரை வழங்கிட மண்டல இணை ஆணையர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–க.வீ.முரளீதரன்
ஆணையர்

//உண்மைநகல் /உத்தரவுபடி//

கண்காணிப்பாளர்

நகல்:

5–6) இவ்வலுவலக க்யூ மற்றும் ஒய் – பிரிவுகள் (எண்ணிடல் மூலம்)

7–11) இவ்வலுவலக எச், ட்டி, யு, இசட், பி – பிரிவுகள் (மின்னஞ்சல் மூலம்)

12) அரசு கூடுதல் தலைமைச்செயலாளர்,
சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையத்துறை,
தலைமைச்செயலகம், சென்னை –9.

13) அரசு செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை,
தலைமைச்செயலகம், சென்னை–9.

14) உறுப்பினர் / செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம்,
காமராஜர் சாலை, சென்னை – 9.

15) தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பு
எண்.10, 4வது குறுக்குத்தெரு, பாலாஜி நகர்,
ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 600 030.

16) மிகை.